பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**17 08 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிஜேபி-யின் புதிய நிர்வாகிகள் பட்டியலை அதன் தலைவர் திரு நிதின் நபின் வெளியிட்டுள்ளார்.

2. மத்திய அமைச்சரவையை விரைவில் மாற்றியமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சமூக நீதித்துறை இணையமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

3. பாரத் டாக்ஸி கட்டமைப்பின்கீழ், எட்டு லட்சம் ஓட்டுநர்கள் இணைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. இந்தோனேஷியாவில் இன்று மீண்டும் நிலநடுக்கம் நேரிட்டது. இது ரிக்டர் அளவில் ஐந்து புள்ளி ஒன்பதாக பதிவானது.

5. ஆசிய ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<>>>>>

பிஜேபி-யின் புதிய நிர்வாகிகள் பட்டியலை அதன் தலைவர் திரு நிதின் நபின் வெளியிட்டுள்ளார்.

இதன்படி, திருமதி வசுந்தர ராஜே சிந்தியா, நாகராஜா உள்ளிட்ட 13 பேர் துணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு பி எல் சந்தோஷ் கட்சியின் பொதுச்செயலாளராகவும், திரு சிவ்பிரகாஷ், திரு சாதன் சிங் இணைப் பொதுச்செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாளராக மத்திய அமைச்சர் திரு பியூஷ்கோயல், ஊடகத்திற்கான ஒருங்கிணைப்பாளராக திரு **Anil Baluni** நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தை சேர்ந்த டாக்டர் வெங்கடேசன் தேசிய செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும் புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

பிஜேபி-யின் புதிய நிர்வாகிகள் பட்டியலில் அனைத்து மாநிலங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பல்வேறு துறைகளை சார்ந்தவர்களை ஒருங்கிணைக்கும் வகையில் இந்த பட்டியல் உள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், இந்த புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

<<<<>>>>>

மத்திய அமைச்சரவையை விரைவில் மாற்றியமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சமூக நீதித்துறை இணையமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

நாக்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு இது அவசியமாகிறது என்றும் திரு ராம்தாஸ் அத்வாலே தெரிவித்தார்.

<<<<>>>>>

பிரதமரின் சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்ட ஏழு அம்ச திட்டத்திற்கு வேளாண்துறை முழுமையாக செயல்வடிவம் கொடுக்கும்

என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் செளகான் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், வேளாண் துறை மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறையின் வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டங்கள் இதில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, வேளாண் துறை வலுப்படுத்தப்படும் என்றும், உணவு உற்பத்தி அதிகரிக்கப்படும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களுக்கு சர்வதேச சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் செளகான் கூறியுள்ளார்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் புனே மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 60 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

**Lavale**-யில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

புனேவிலிருந்து **Satara** மற்றும் **Solapur** இடையேயான நெடுஞ்சாலையை மேம்படுத்துவதற்கான திட்டமும் இதில் அடங்கும் என்று அவர் கூறினார்.

சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு உதவிடும் என்றும் திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>>

பீகார் மாநில அரசு கனிம வளத்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு **Satish Chandra Dubey** கூறியுள்ளார்.

கனிம வளங்கள் முதலீடு தொடர்பாக பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கனிமவளத்துறையின் ஒப்பந்தப் புள்ளிகள் தொடர்பான அனைத்து அம்சங்களும் இந்த நிகழ்ச்சியில் எடுத்துரைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விருப்பம் உள்ள தொழில் நிறுவனங்கள் இதில் முதலீடு செய்யும் என்றும் அவர் கூறினார்.

பீகார் அரசின் ஒத்துழைப்போடு இந்த நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் தொழில் முதலீடுகளை அதிகரிக்க உதவுவதோடு, புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் என்றும் திரு **Satish Chandra Dubey** தெரிவித்தார்.

<<<<>>>>>

வேலைவாய்ப்பின்மை கடந்த மாதம் ஐந்து புள்ளி ஒரு சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தேசிய புள்ளியியல் அலுவலகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளதாக அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, ஊரகப்பகுதிகளில் வேலைவாய்ப்பின்மை நான்கு புள்ளி ஐந்து சதவீதமாக உள்ளது என்றும், நகர்ப்புறங்களில் இது ஆறு புள்ளி ஏழு சதவீதமாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>>

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** பீகாரில் உள்ள **500** வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் இன்று கலந்துரையாடினார்.

**Rajgir**-ல் உள்ள நாளந்தா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>>

பாரத் டாக்ஸி கட்டமைப்பின்கீழ், எட்டு லட்சம் ஓட்டுநர்கள் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கூட்டுறவுத்துறையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த பாரத் டாக்ஸி தில்லி, மும்பை, லக்னோ, சண்டிகர், ஜெய்பூர், கான்பூர், புனே ஆகிய நகரங்களிலும், குஜராத்திலும் செயல்பாட்டில் உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த பாரத் டாக்ஸி அடுத்த மூன்றாண்டுகளுக்குள் நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**45** லட்சம் வாடிக்கையாளர்கள் பாரத் டாக்ஸிக்கான கைபேசி செயலியை பயன்படுத்தி வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

தெலங்கானாவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

ஹைதராபாதில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதனை வெளியிட்ட அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு சுதர்சன் ரெட்டி, இப்பணிகள் கடந்த ஜூன் மாதம் 25-ஆம் தேதி தொடங்கி, கடந்த 10-ஆம் தேதிவரை நடைபெற்றதாக கூறினார்.

இறுதி வாக்காளர் பட்டியல் அக்டோபர் 19-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் திரு சுதர்சன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியை, மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு தேவேந்திர பட்நவிஸ், மகாராஷ்ட்ராவிற்கான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதித்ததாக தெரிவித்தார்.

<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உதம்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட ராம்நகர் வனப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவுத்

தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் இந்த தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதி முழுவதும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>>

மேற்குவங்கத்தில் நான்குமாடி தங்கும் விடுதியில் நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை **7**-ஆக அதிகரித்துள்ளது.

**Birbhum** மாவட்டத்துக்கு உட்பட்ட **Tarapith**-ல் உள்ள இந்த அடுக்குமாடி தங்கும் விடுதியின் முதல் தளத்தில் அதிகாலை ஐந்து மணியளவில் இந்த தீ விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா **2** லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா **50** ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

<<<<>>>>>

மணிப்பூரில் ஆறு தீவிரவாதிகளை பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

கிழக்கு மற்றும் மேற்கு இம்பால் மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்களையும் பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>>

மிசோரம் சட்டப்பேரவையின் இரண்டு நாள் மழைக்கால கூட்டத்தொடர் வரும் 25-ஆம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் மாநிலத்தின் பாடலுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>

இந்தோனேஷியாவில் இன்று மீண்டும் நிலநடுக்கம் நேரிட்டது. இது ரிக்டர் அளவில் ஐந்து புள்ளி ஒன்பதாக பதிவானது.

**Flores** மாகாணத்தில் இன்று அதிகாலை இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை முகமை கூறியுள்ளது.

<<<<>>>>>

பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுவசதி வழங்கும் திட்டத்திற்கான நிதியினை, பிற திட்டங்களுக்கு மாற்ற அந்நாட்டு அரசு முடிவு செய்திருப்பது கவலை அளிப்பதாக உள்ளது என்று உலக வங்கி கூறியுள்ளது.

**Balochistan** மாகாணத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டுவசதித் திட்டங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை, பிற பணிகளுக்கு மாற்றுவது அந்த மாகாணத்திற்கு கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

<<<<>>>>>

ஆசிய ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா **2** தங்கப் பதக்கங்களை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் **Vignesh Vemula** மற்றும் **Saranya Devi** இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

---------------

கானாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Abhyuday Choudhary — Ayush Makhija** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை **21-16, 21-14** என்ற செட் கணக்கில், நைஜீரியாவின் **Joseph Abel** — **Segun Obasanjo Idowu** இணையை வென்றது.

------------

உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா — இங்கிலாந்து இடையேயான ஆட்டம் நெதர்லாந்தின் **Amstelveen**-ல் தற்போது நடைபெற்று வருகிறது.

**<<<<END>>>>>**